உ

நாகமங்கலப்பநாயகன்

விறலிவிடுதூது

இஃது

பொய்கைப்பாக்கம்

ஸ்ரீரிஷ்ரபுத்ரவுபாத்தியாயரால்.

பரிசோதிப்பித்து

தமது

வித்வரக்ஷாமிர்த

அச்சுக்கூடத்தில்

சைதாப்பேட்டை-தேசப்பசெட்டியார்

குமாரர்

துலுக்காணசட்டியாரால்.

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது

விசுவாவசு-௵-சித்திரை-௴

இதன் விலை-ரூபாய்-௨.

வெற்றிவேலுற்றதுணை.

சிறப்புப்பாயிரம்.

உலகெலாந்தந் வுமையொருபாக
னிலகுநன்னுதலெழீஇ யெரிசுடர்விழிப்பொறி
யாறொருகூறா யீறில்பேராற்ற
லானனமிருமூன் றானெனுமுறைபெறீஇ
மிளிர்சரவணபவன் கிளர்புயவீர
வாகுதேவாதி யாகுமொன்பதின்ம
ரிணையறுபூதக் கணமொடுசென்றோ
ரிடும்பையிலமரர்க் கடும்பகையாஞ்சூர்
முதறடிந்தும்பர் பதிசமைணுளற்
கருளுபுதேவகுஞ் சரிமணம்புணர்ந்தோ
ரெல்லையிலாட னல்லுலகாடுபு
பாமகடலைவன் மாமகள்கொழுந
னாதியோர்வழுத்த சோதியார்கந்த
மலைமிசைநிலைஇய கலைநிறைபுலவன்
றன்னருள்சுட்டிப் பின்னிகல்வல்லன்
மநுவழிவந்த தநுவினனாமுகு
குந்தனின்றாற்று மந்தமிறவத்திற்
கிதயமதுருகி நிதியருள்பெருகி
வந்துபோர்கண்டசெங் குந்தரொன்பானெனும்
வீரரையவன்படை வீரராத்தரவவர்
கோவின்மங்கையர்க்குக் காவலராகி
யெட்டுத்திக்குள மட்டறுமடையலர்
போரில்வெங்கண்ட சீரியராயமர்ந்
தான்றபேராற்ற லேன்றசுந்தரராங்
குமரரைத்தரவவர் நிமிர்திறலெண்ணா
ரெண்ணச்சென்னாள்கடை நண்ணிப்புரிந்திட்
டோவாச்செல்வ மேவாத்தகைபெறாஉஞ்
சந்தமார்மருமர்செங் குந்தர்வண்புகழ்நில
மெங்குநின்றொளிர்தரத் தங்குலத்தாயிரஞ்
சிரமறுத்தாசனந் தரையிலிட்டொப்பிலா
வமிழ்தினிற்சுவைதரூஉந் தமிழ்தெரிபுலவரா



பூண்டவிராதணி தாண்டவராயவே
ளிப்புவியெலாம்புகழ் சுப்பராயன்செயு
நன்னிலைவந்த சென்னிலையுடைய
அண்ணாமலையென நண்ணுநாமத்தன்
னனைதார்த்தோளினன் வினைதீர்த்தான்றிருத்
தோன்றலெனவந்த வான்றகைவல்ல
விராமதாபரனெனு மிராமசாமிப்பதி
பொன்னாத்தருங்கைச் சின்னாத்தைதந்த
சிவசங்கரிக்காள் சிவசங்கரக்கோ
வருணனில்விளங்கும் அருணைசலன்றருங்
குழந்தையென்றுதித்த குழந்தையென்பெயரோ
னுவலுமொன்பதின் மருநுவன்றாகத்
திசைபலவற்றினு மிசையிரபந்த
மாயிரமறைத்ததின் மீயுயர்பொருளின்
வழுக்களைந்தான்ற விழுப்பொருளாக
வங்கையினெல்லிச் செங்கனியென்ன
வியற்றினனுரைபெருங் கயற்றிரளெழுந்து
மழைதலைச்சுமந்த தழைகமுகின்குலை
யுகுத்தரவிந்த நகைத்துணைருறங்கு
மணிநீர்வளத்த வணிநீர்ப்பெண்ணை
நதிபுறமுடுத்த நிதிபெறுபட்டாம்
பாக்கத்தெழிற்று மாக்கடுதிக்குஞ்
சிதம்பரமுகிலரு ளிதம்பன்
வாய்மைசேர்சுப்ப ராயநாவலனே.

இஃது புதுவை, க - சிப்பிராயமுதலியாராற்சொல்லியது.

தருமபுரவாதினம்

சோமசுந்தரக்கவிராயராற் சொல்லியது.

சீரார்பொன் னையன்முனந் திரையமுதைப் புலவருணச்செ
ய்தல்போலிப், பாராரப்புதுவையில்வாழ் பொன்னையமா லீட்டி
யெழு பதெனும்வாரி, யோருருமுரையமுதை யெழிற்பட்டாம்
பாகைமகிழ் நிபுணன்மிக்க, பேராருஞ்சுப்பரா யக்கவியா மந்தரத்
தாற் பெறச்செய்தானே.

சிறப்புப்பாயிரம்-முற்றிற்று.

திம்மராயப்பெருமாள்செஞ்சரண்சேகரனை .... ✻
மும்மதமால்யானையூர்த்தனின்மனை - ரம்ய ௨௪
கருணாகரனைக்கனயோகவானைப் .... ✻
பொருநாவலர்பூஷணனை - இருதிறையைச் ௨௫
சந்த்ரமுகமந்த்ரதளதந்த்ர [illegible] துரந்தரனைச் .... ✻
சிந்தமகுமாரசெயதரனை - முந்து ௨௬
நிலைக்கோட்டையானைநெடுங்கலியைத்தூரத் .... ✻
துலைக்கோட்டுந்தியாகதுரையை - மலைக்கோட்டில் ௨௭
ஆனைவைத்துப்பார்க்குமறுபத்துநாலுமன்னர் .... ✻
[illegible]யானை - வாளரசர் ௨௮
வெஞ்சமருக்கஞ்சாவிருதுவென்றிவாகனைநம் ...... ✻
பெஞ்சநகர்காக்கும்பெருமானை - வஞ்சகர்க்கோர் ௨௯
தண்டப்பெரும்புலியைச்சாமித்துரோகரைக்காய் ...... ✻
வெண்டயத்தாற்சூரியனைவீரியனை - மண்டலிகர் ௩௰
மாகனகங்கப்பமிடும்வாயிலானைப்பெரிய .... ✻
நாகமகேந்த்ரநராதிபனை - யோகனையான் ௩௧
பாடியதுமையன்முகம்பார்த்ததுமென்கலிவிட் .... ✻
டோடியதும்பாக்கியம்வந்துற்றதுவும் - நாடியிங்கே ௩௨
நான்வந்ததுவுநடுமதியிலேயிரண்டு .... ✻
மான்வந்தனையவிழ்மாதேகேள் - தானபரன் ௩௩

[பாட்டுத்தலைவன்புகழ்ச்சி].

திக்கெல்லாங்கொண்டாடுஞ்செங்கோல்விஜயரங்க .... ✻
சொக்கநாதேந்த்ரதுரைராஜன் - சக்ரபதி ௩௪
சேதுபதிபாண்டியகுலதெக்ஷிணசிங்காசனந .... ✻
ராதிபதிமெச்சுநரபாலன் - கோதில் ௩௫
உருப்பான்மைவெண்பிறைமேலூர்வதுதன்கோல .... ✻
மருப்பாகும்பன்றிமலையான் - திரைக்கரத்தில் ௩௬
ஆரமணியாரமணியாரமணிவாரிநடு .... ✻
வாரியிடுங்குடவமாநதியான் - தார்வேந்தர் ௩௭

விறலிவிடு தூது.

வீதிக்குவீதிவிவாகமணிமுரசம்............................✻
நாதிக்கும்பாண்டிவளநாட்டினன்-ஆதித்தன்...............௩௮
தேருநருணசெயதிகோபுரநிலைக்குள்..........................✻
ஊருமொனுமொன்பதூரினன்-சூரியபோர்....................௩௯
வேலைவைக்குஞ்செங்கருங்கண்மின்னாரிதயவண்டு..............✻
மாலைவைக்கும்பூந்தளவமாலையான்-கோல....................௪௰
[illegible]முதுகணைந்தகலனைகொண்டு........✻
தகைதவிர்ந்துநடைபிறந்துசமாடர்ந்து-பகைவர்தங்கள்...௪௧
நிலையினின்றுதிமிதிந்திதகுதிதந்தியெனநடஞ்செய்..........✻
துலைவிவந்துகனகதண்டையொலிமிகுந்து-கலகலென்று...௪௨
கொஞ்சிடச்சதங்கையிட்டகொண்டலொத்திடுந்திறத்த.......✻
வெஞ்சினப்ரசண்டவுக்ரவெண்பரியான் - விஞ்சுகரம்.......௪௩
ஒன்[illegible]லுக்கொப்பாயிரண்டு.........✻
வென்றிப்பிறைசுமந்தமேகமெனத் - துன்று................ ௪௪
மதங்கலெ[illegible]றுமாரிசிந்தப்பாகர்.........................✻
ஒதுங்கநால்வாயாலுதறி - அதிர்ந்துபொரும்....................௪௫
அஞ்சாருதிரத்தையாறுக்கியோரேழு............................✻
மஞ்சார்புனலைமடுத்[illegible]............................௪௬
னென்பதோமொட்டுமிணையில்லையென்றகற்றி.....................✻
ஒன்பதூர்வீதியுலாவியே-வம்புரைப்போர்......................௪௭
பைம்பொன்முடியிடநீப்பத்துநகமுந்தேய்ந்த......................✻
கும்பரணகம்பீரகுஞ்சரத்தான்-அம்புவியில்.................. ௪௮
காந்துகலியைவெட்டுங்கண்டகோடாரியைப்போல்..............✻
ஏந்துவெள்ளைப்பக்கறையிடாலினன்-சாய்ந்தோடிக்.......௪௯
குன்றிற்கனூதார்குடும்பங்குடியேற..........................✻
மூன்றிற்குமுறுமணிமும்முரசான்-நின்றவடி................௫௰
தூக்கினர்சென்னிதுடிக்கத்துணித்துவிடும்......................✻
ஆக்கினைசக்கரம்போலாணையான்-பாக்கியவான்...............௫௧
கற்பகமாம்பட்டையங்கார்கருணையேமணக்கும்................✻
பொற்கமலம்போன்றமனப்பூரணவான்-பற்றலார்.............௫௨

தண்டார்மகுடந்தடவுஞ்சயவீர.................................*
மண்டாமணிமுழங்குங்காலினன் - மண்டுசமர்................௬௩

புத்தகளத்தொன்றுருயிர்மெய்ந்தகுற்றுடையாள்..............*
வைத்தணைத்துக்கட்டுமருங்கினன் - தைத்தலத்தில்..........௬௪

ஐந்தருவுமைந்தாயிரமாகித்தருவெனச்..............................*
செந்தமிழ்க்குநல்குமலர்ச்செங்கையான் - பைந்தொடியார்.௬௫

பொன்முலையாங்கோட்டிற் ... ...நாட்டி..............*
மன்மதனூலொடுதுடமார்பினன் - நன்மைதரும்..............௬௬

வெற்றிச்சிறுபெண்விளையாடுஞ்சிற்றிலெனச்.....................*
சுற்றியசெம்பூமணிதோளினன் - கற்றவராங்.......................௬௭

கோக்குலத்தைக்காத்தருளுங்கோபாலர்வேயிசைபோல்.........*
வாக்குமதுரம்பொழி ... ... - நாக்குளிரச்..............௬௮

சொல்விரசங்கடுவர்ப்பென்றுதள்ளியின்பக்.......................*
கல்விரசம்பருகுங்காதினன் - வல்ல.................................௬௯

மருவலரைவெட்டுகின்றவாள்போன்முகத்திற்......................*
கருணைபுலவுமலர்க்கண்ணன் - இரவினுடல்.....................௭௰

சாய்த்தமதிமுகத்துத்தையலார்முத்தமிட...........................*
வாய்த்தமுழுமதிபோன்மாமுகத்தான் - காத்தருளும்...........௭௧

எம்பிரானைநோபிலேசாடியெந்நாளும்...............................*
செம்பொன்முடிதாங்குமலர்ச்சென்னியான் - உம்பர்தொழும்.௭௨

நீண்மாலுமெண்ணீற்றுநெற்றிக்கண்ணானுதை....................*
மன்மதன்காணென்னும் வடிவினன் - தன்னுடைய..............௭௩

வல்லக்கவார்குலத்தில்வாள்வேந்தர்கண்குளிரப்..................*
பல்லக்குமேலுலவும்பாக்கியவான் - வில்லேந்திக்...............௭௪

கைகொண்டுபொற்படியிற்கால்கொண்டுபஞ்சகதி...................*
மெய்கொண்டணையபரிமேற்கொண்டு - செய்யரணா...........௭௫

துங்கதளகர்த்தர்துரைமக்கள்வாள்பிடித்துச்............................*
சிங்கமெனச்சுற்றித்திரண்டுவர - மங்குலெனக்..................௭௬

கூனக்குறுகுறுமொட்டகமேற்கொட்டுகின்றடம்மாரம்...................*
யானையின்மேற்பேரிட்டிருந்துவரக் - கேசனையொடு.........௭௭

விறலிவிடுதூது.

தாக்குமறுமண்டலிகர்தங்களுக்குச்சென்றுசொல்லுங் ......*
கூக்குரல்போல்வீரசின்னங்கொம்பூத - நோக்கும்.......௬௮
பரிதிபகைக்குப்பகையெழுந்ததென்ன ....*
விருதுகருடாலவட்டம்வீசத் - தரளக்கால்...................௬௯
வெள்ளைக்கொடியாடைமேகங்கிழித்துவரப்...................*
பிள்ளைப்பிறைபோற்ப்ரகாசிக்க - வெள்ளைவட்டச்..........௭௰
சித்திரக்குடைகள்செயமாதூக்கிட்டநிழன்....................*
முத்துமணிப்பந்தரெனமொய்த்துவரக் - கைத்தலத்திற்...௭௧
கத்திபிடித்துவெள்ளிகட்டினதுபாக்கிகொண்டு..............*
பத்துலக்ஷங்காலாட்படைநடக்கத் - தத்துபரி...............௭௨
கொக்குநரையான்கைக்குமரியெனராவுத்தர்.................*
கைக்குளடங்காதுகான்மீற நெய்க்கவளம்...................௭௩
கூட்டியிளையூட்டியிருகொம்புகத்திபூட்டிமதம் ....*
மூட்டிவிட்டமால்யானைமுன்னடக்கக் - கூட்டமிட்டு...௭௪
வாரிட்டணிவகுத்துவாதிட்டவேற்றரசர்........................*
போரிட்டவெங்களத்திற்போயெதிர்த்து - நேரார்பேற் ...௭௫
சுட்டபீரங்கித்தொனியும்பகைமு[illegible] ....*
விட்டமுகிலும்பிடியுமெனப்-பட்டயங்கள்...................௭௬
வீசுவதும்வெட்டுவதுமின்னலெனவீரர்சிலை...................*
பூசலம்புமாரிமழைபோற்பொழியத் - தேசப்.................௭௭
பரதளங்கள்பட்டுருளப்பாய்ந்தபெருஞ்செந்நீர்ப்..............*
பிரளயப்ரவாகம்பெருகச் - சிரதலத்தில்.......................௭௮
ஆளையிருப்புலக்கையானையடிக்கவிழு.........................*
மூளைநுரைத்திரளாய்மொய்த்தோட - வாளாற்.................௭௯
பந்திரமோமிவரும்பல்லக்குப்பேய்க்கு...........................*
விழுந்தோணிபோலுமிதப்பக் - கிடந்துசிலர்.................௮௰
வேர்த்துப்பரிசைகொண்டுமேன்மூடிச்சென்னிபெட்டிப்...*
பார்த்துக்கடமெனப்பதுங்கப் - போர்த்தலையில்..........௮௧
மந்திரவாள்வேந்தர்மகுடத்துதிர்ந்தரத்நம்....................*
இந்திரகோபங்களெனச்சிதறச் - செந்தறுகண்...............௮௨

விந்தைமிடிதீரவெற்றிப்பயிரோற்றி .... *
வந்துதொழுவிருக்கும்வாள்வீரன் - முந்துபெரும் .... ௮௩.

பாதலத்தில்வேரோடிப்பாரிற்படர்ந்துவட .... *
பூதரத்திலேறும்புகழினான் - நீதிபரன் .... ௮௪.

சிந்தமகுடேந்த்ரதுரைசிங்காசனாதிபதி .... *
தந்தசௌபாக்கியசம்பன்னன் - செந்துவர்வாய்க் .... ௮௫.

காமவிழிவேல்விழியார்கைவடிவெல்லாமெழுதும் .... *
நாமவடிவேற்பெரியநாகேந்த்ரன் - சேமநிதி .... ௮௬.

பூராதிபன்வாழ்வையொக்குநவகோடி .... *
நாராயணன்பெரியநாகேந்த்ரன் - சேரலராம் .... ௮௭.

ஆட்டுக்கூட்டங்களிலோராண்புலிபோற்பாயுநடு .... *
நாட்டுக்குழிற்பெரியநாகேந்த்ரன் - பூட்டுசிலை .... ௮௮.

அம்பொன்மலிவேளரசனுக்குவீட்டை .... *
நம்பன்றமால்பெரியநாகேந்த்ரன் - ஸ்தம்பமென .... ௮௯.

லோகஞ்சுமப்பதிலோராயிரமௌலி .... *
நாகம்பொரும்பெரியநாகேந்த்ரன் - பாவெனுஞ்சொற். ௯௰.

பாவுக்கேறிக்கணப்புல்லக்கேறிப்புலவோர் .... *
நாவுக்கேறும்பெரியநாகேந்த்ரன் - வாவிதிகழ் .... ௯௧.

பெஞ்சநகர்வாழப்பெருஞ்சீர்வளர்ந்தோங்கக் .... *
கஞ்சமலர்மாதுகளிகூர - வஞ்சமுறும் .... ௯௨.

பொய்யும்பந்தோடப்புண்ணியமுந்தண்ணளியும் .... *
மெய்யுங்கலந்துவிளையாடப் - பெய்யுமழை .... ௯௩.

வானம்வழங்கமனைவாழ்க்கையோங்கவன்ன .... *
தானம்வழங்கத்தவமோங்க - நான்மறைக்கும் .... ௯௪.

நன்னிதியாமேகவண்ணநாதர்திம்மராயர்திருச் .... *
சன்னிதியிற்பூசைதழைத்தோங்க - இந்திரத்திப் .... ௯௫.

எங்கோனபிஷேகமேந்துமனுவிஞானச் .... *
செங்கோலரசுசெலுத்துநாள் - சங்கேந்தும் .... ௯௬.

விறலிவிடு தூது.

[அவதானிதன்பிறப்பாதிசொல்லல்.]

காரங்கமேன்மிக்கடவுளிருக்குமந்நாச் .... ※
சீரங்கத்தேபிறந்தேன்செல்வத்தில் - ஈரைந்தே ௯௭
டாறுவயதினுக்குள்ளாரியமும்வேதமுநா .... ※
வேறித்தமிழ்நூலிலக்கணத்தின் - மீறினேன் ௯௮
வாலசரஸ்வதியென்வாக்கிற்ப்ரசன்னமதா .... ※
நாலுகவித்திறமுநானறிந்து - வேலும் ௯௯
மயிலுமெனச்சொன்னவுரைமாறுமற்சொல்லக் .... ※
கயிலாடசிங்கிகழற்ற - அயலொருவன் .... ௱
சொன்னவிறுச்சொல்லெதிர்க்கூட்டப்பின்முதுகு .... ※
தன்னிலெறிந்தகல்லுத்தாமென்னைப் - பன்னுசது ௱௧
ரங்கவிளையாட்டுக்கடிபார்க்கச்சொல்லுவோர் .... ※
தங்கள்கவியையவதானிக்கச் - சங்கத்தில் ௱௨
எட்டெட்டெழுத்தாணிக்கேற்றகவிசொல்லவும்யான் .... ※
அஷ்டாவதானியென்பதாயினேன் - மட்டார் ௱௩
திருப்பதியிலேவாசுதேவன்மகளைக் .... ※
கருப்புருவவின்பக்கனியை - விருப்பமுள்ள ௱௪
பூங்காவனத்தைப்பொருத்தமுடன்வேட்டுப் .... ※
பாங்கனவாழ்விற்பயிலுநாள் - ஆங்குசெவ்வந் ௱௫
திசேர்திருச்சன்னிதியிலேநந்திழையார்தம்மிலொரு .... ※
தாசிமேல்வைத்தேன்றயவுநான் - நேசமாய் ௱௬
இந்தரங்கத்தேதிரிந்தேனின்பரசவல்லியிடத் .... ※
தந்தரங்கத்தேதிரிந்தேனாசையால் - அந்தத் ௱௭
திரிச்சிராப்பள்ளிக்குச்செல்லாதிருக்கத் .... ※
தரிச்சிராதென்மனதுதானும் - ஒருத்தன் ௱௮
அறியாச்சிறுவனுடன்யானொருநாளந்த .... ※
வெறியார்குழற்பரத்தைவீட்டிற் - பிரியமுடன் ௱௯
சென்றிருந்துவந்தேன்றிடுதிடெனவோடிப்போய்க் .... ※
குன்றிருந்தகொங்கைக்குலமனையாட் - தன்கணவர் .... ௱௰

ஓடத்திலேறி னுருத்தரிடம்போக்கடித்தார்.......................*
நாடிச்சிர கிரியை நண்ணினார் - கூடவந்த ....௱௰௧.

என்னைச்சவுக்கையில்வைத்தின்பரசவல்லியெனும்.. ... .*
பொன்னனையாள்வீட்டுக் குட்போய்ப்புகுந்தார் - அந்நேரம்

மிஞ்சிமிஞ்சிப்பேசினாள்வேசிமகளதற்குள் ....*
அஞ்சியஞ்சிப்பேசினாரையங்கார் - வஞ்சியந்த ....௱௰௩.

வீட்டுக்கதவடைத்தாண்மெள்ளமெள்ளத்தொங்கினாள் ....*
காட்டிப்புருவோசைகாட்டினாள்-வீட்டைவிட்டு.............௱௰௪.

வந்தார்நம்மையபொன்னைவாவென்றார்காவிரியிற் ....*
சந்திபண்ணியிக்கரையிற்றண்டினார் - இந்தவூர்க் ....௱௰௫.

கெலிமார்க்கஞ்சொல்லாதேயென்றுசொன்னான் றந்தத்....*
துன்மார்க்கப்பையபெல்லாஞ்சொல்லிவிட்டான் - மன்மம்.

தொடுத்தாள்கெடுத்தாள் தூங்குமஞ்சம்விட்டுப் ....*
படுத்தாள்பகைநானைப்போற்பார்த்தாள் - அடுத்தடுத்து.௱௰௭.

வேண்டினேன் குட்டுவெளியாக்குமென்னைத் ....*
தீண்டாதேயென்றாள்சிராப்பள்ளியிலாண்டவள்பாற் ....௱௰௮.

செல்லாயென்றாள்பரத்தைதேடுவாளையென்றாள் ....*
சொல்லாதவார்த்தைசிலசொல்லினாள் - இல்வாள்........௱௰௯.

வலிகிடந்தமாற்றமுனைக்குமேலவ்வில்...........................*
புலிகிடந்த தூறாய்விடுமென் - றுலகறியச்..................௱௨௰.

[யாத்திரை செய்தமை கூறல்.]

செப்பினாளவ்வையென்றுதேர்ந்தேனிராத்திரியே ....*
தப்பினேன்கைக்கடங்கத்தக்கதுகொண் - டப்பால் ......௱௨௧.

அதிசயங்களானதலம்யாவுமறிவோம்...............................*
நதிகள்பலமுழுகுவோநாமென் - றிதயமாய்.... ....௱௨௨.

வெள்ளைநாவல்படிக்குமிக்கபதியுந்தரிகள் ....*
துள்ளுபரியானதொருதொன்னகரும் - தெள்ளுதமிழ். ..௱௨௩.

செப்பகத்தவுதிறந்தவூருங்கருங்கல் ....*
டப்பலெனவந்தகடற்பதியும் - இப்புறத்திற் ....௱௨௪.

பாங்குடையவாண்டுபணிரண்டிக்கோர்காண்மா ....*
மாங்கநீர்பொங்கும்வளப்பதியும் - பூங்குடத்தில் ......௱௨௫.

அங்கத்தைமங்கைவடிவாக்கினவொருந்தமிழ்க்குத் ....*
தங்கத்தையீந்ததனியூருஞ் - செங்கருங்கட் ....௱௨௬.

காமெரியக்கனல்வீசுமாமலையும் ....*
யோகங்கழுகுசெயுமொண்கிரியும் - வேகமிக்க ....௱௨௭.

சான்றுண்டுவெம்முதலைவிழுண்டபிள்ளைதனை ....*
ஈன்றுண்டுசென்றழைத்தமூதூரும் - மான்றுனோர்...௱௨௮.

தாசிக்கெழுந்ததனத்தைலிங்கமென்றொருவன் ....*
பூசித்துப்பேறுபெற்றபொன்னகரும் - நேசித்து ......௱௨௯.

மைந்தனுடலரிந்தூமாதவத்தோர்க்கிட்டுவினைப் ....*
பந்தமரிந்தோன்பழம்பதியும் - செந்தமாம் ....௱௩௰.

ஆட்டைப்புலிகாக்குமம்பலமுநாலுவசி ....*
நாட்டிநடிக்குந்திக்குநகரும் - காட்டிடையினன் ....௱௩௧.

கண்ணைப்பறிகொடுத்தகற்பதியும்வண்ணான்றன் ....*
பெண்ணைப்பறிகொடுத்தபேரூரும் - மண்ணுலகில் ......௱௩௨.

தீண்டாதாரெச்சில்செழுமறையோர்க்கீந்தாலும் ....*
வேண்டாமெனுதேற்குமெய்ப்பதியும் - மாண்டவர்தங் ..௱௩௩.

காதிலுபதேசங்கடவுள்சொல்லும்பதியும் ....*
சீதரன்மாயாபுரியுஞ்சேவித்து - நாதிக்குஞ் ....௱௩௪.

சங்கமுகந்தங்கெறிதரங்கமுககங்கையுடன்......................*
சங்கமுகதீர்த்தமெல்லாந்தாநாடி - அங்கிருந்து..........௱௩௫.

தங்குல்பகலாக்கடலோட்டக்கப்பலிலோர்......................*
திங்களில்வந்தெய்தினேன்சேதுவினில் - மங்காத் ....௱௩௬.

தனுக்கோடிதீர்பசயனம்பணிந்து.........................*
மனுக்கோடிசூழ்செந்தூர்வந்தேன் - கனத்த ....௱௩௭.

திருப்பதியொன்பதுநான்சேவித்தங்குள்ள ....*
அருட்பொலியுந்தீர்த்தமெல்லாமாடித்-தருப்பொலியும்.௱௩௮.

குற்றாலநெல்வேலிகோதைவில்லிபுத்தூர்வந்...................*
தற்றேறன்திருச்சுழிகையூர்பணிந்தேன் - நெற்றிவிழித்..௱௩௯.

தம்பிரான் பூவணத்தைச் சந்தித்தே தன்சந்தேகந்தும்.............✻
எம்பிரான் சோலைமலைக்கெய்தினேன் - பைம்பொற்.....௱௪௰.
றலையருவியாடியெங்கள் சங்கத்தழகர் ....✻
மலரடியைப் போற்றிமகிழ்ந்தேன் - ஸ்தலமகிமை ......௱௪௧.
யானறிந்த நாளங்கிருந்தேனங்கேயோர்...................✻
ஞானியையன்றன்னுடனே நட்பானேன் . மேன்மைபெறு ..௱௪௨.
சொக்கர்மதுரைதொழுதுவரவே நீரும்.......................✻
ஒக்கவரவேண்டுமெனவுரைத்தேன் - தக்கோன் ....௱௪௩.
நகைத்தானிவ்வண்ணநடந்தகதையுண்டு ....✻
தொகுத்ததனைப்போசொல்வேன் - மிகுத்தபுகழ்...௱௪௪.

[ஞானியார் நல்வழியுரைத்தமைகூறல்.]

மேவிச்சிறந்தவொருத்திருநாள்........✻
சேவிக்க ...கமனஞ்சிந்தித்தான் - தாவில்..........௱௪௫.
அமைச்சனங்கேசென்றக்காலங்கொருத்திவல்லி..............✻
உமைச்சதிசெய்வாளென்றுரைத்தான் - அமைச்சனுரை...௱௪௬.
...நடந்தானந்தவேசைகைக்குட்சிக்கின்றான்...............✻
வஞ்சிமருந்தான்மதிகெட்டான் - குஞ்சரமும்............ ௱௪௭.
நாடுநகருநவநிதியும்வாங்கினாள்........................✻
ஒடுங்குழையுமாவோட்டினாள் - ஆடுகின்ற...............௱௪௮.
கூத்தாடிகள்வன்போற்கோலம்பூண்டாடுவதைப்...............✻
பார்த்திலையோசொற்பாவலீர் - வாய்த்த.............௱௪௯.
கறைக்கண்டர் தென்மதுரைகாணவென்றுலாங்கோர்.........✻
நெறநட்டுண்டதனையான்சொல்வேன் - பொறுத்தகசம்...௱௫௰.

[மதனாபிஷேகத்தின் பிறப்புணர்த்தல்.]

அஷ்டதிக்குஞ்சூழ்கோயிலாலவாய்ச்சொக்கருக்கு.........✻
தட்டதெடுக்குந்...ள் - வட்டமுலை..................௱௫௧.
மாணிக்கமாலையெனுமங்கையொருபெண்ணடுநன்...........✻
காணிக்குத்தேடக்கருத்தாகி - உளனைத்...............௱௫௨.
நறைமெழுகியுண்டுதவங்கிடந்துமெந்தக் ....✻
குறையொனக்கு...கேட்டும் - பெறுதவற்குச்..........௱௫௩.

செப்புத்தகடெழுதிச்செம்பொற்கழுத்திலிட்டும் ....※
செப்பத்துக்காமருந்துகிண்டியுண்டும் - தப்பாத் ....௱௫௪.

திருவனந்தல்சேவித்துஞ்செண்பகப்பூவாசம் ....※
மருவனந்தநந்தனங்கள்வைத்தும் - திலாயுடலை ....௱௫௫.

வெற்றிருருவர்கண்டுவிரும்பாதநாள்தாழை..................※
காற்றடிக்கப்புத்தகத்தைபோலச்-சாற்றும்...............௱௫௬.

அரிவைதெரிவைகடந்தப்பானடக்கும்.......................※
பருவத்தேகர்ப்பம்படைத்தாள்-நரைவீழ்..................௱௫௭.

தலையிற்கறுப்பிறங்கிச்சாய்ந்ததெனத்தொங்கு................※
முலையிற்கறுப்புமுதிரக்-கலக...............................௱௫௮.

விழிவேல்குழியமுகம்வெண்மதியமாக.........................※
எழின்மேனிபச்சைநரம்பெய்த்-தழைகருஞ்சூல்......௱௫௯.

கொண்டவயிறுபெருஞ்சைக்கூளேந்திரன்சத்திரத்தில்...........※
உண்டுவருவோர்வயிற்றைஒப்பாகத்-தண்டேன் ......௱௬௰.

அளிக்குடிக்குந்தாராளரும்புளியங்காய்க்கும்...................※
புளிக்குடிக்குமுன்னமிச்சைபூண்டாள்-களிக்கவயிற்....௱௬௧.

றார்த்தெர்த்தபிள்ளைக்குள்ளாவார்வாயிலள்ளிப்...................※
போடுவதைத்தன்வாயிற்போட்டறிந்தாள்-கூடிவந்த.... ௱௬௨.

மாதமொருபத்தாய்வயிறுளைந்துபெற்றுளவ்.................※
வேதனையான்மூர்ச்சையாய்மெய்சோர்ந்தாள்-தாதிமார் ௱௬௩.

பெண்ணென்றார்காதிற்பிழிந்தமருந்ததுபோல்................※
துன்னெனவெழுந்துதுயர்தீர்ந்தாள்-வண்ணமணிப்...௱௬௪.

பொற்றொடிக்கைமங்கைநல்லாள் பொன்காய்க்கும்பூவொன்று
பெற்றதுபோலீன்றெடுத்தபெண்கொடியை-மற்றுளார். ௱௬௫.

(மதனாபிஷேகத்தின்வளர்ப்புணர்த்தல்.)

எந்திரியிருவைபாலெடுத்துநறுநீராட்டிப்.....................※
பூந்துகிலால்மெய்துவட்டிப்போற்றினார்-வாய்ந்தசங்கிற்௱௬௬

சேனையுடன்வஞ்சத்திருட்டுமருட்டுமவ.......................※
தானப்புரட்டுந்தனம்பறிக்க-மானிடர்க்குச்...........௱௬௭.

செய்யுங்கபடியகாதித்திரிப்புமாக்காசப் ....*
பொய்யுங்கலந்துபுகட்டினாள் - செய்யபகந் ....௱௬௰௮.

தேனேகனியேதெவிட்டாததெள்ளமுதே ....*
மானேயென்கண்ணேமரகதமே - நானின்ற ....௱௬௰௯.

பொன்னேயெனவெடுத்துப்பொற்குறங்கின்மீதேற்றி........*
மின்னேரிடையாள்விழிபரப்பி - நன்னுதலிற்............௱௭௰.

பாப்பிட்டசொல்லிவெள்ளிப்பட்டமெனவெண்ணீற்றுக் ... *
காப்பிட்டாள்சிற்றடிக்குங்காப்பிட்டாள் - சேப்பிட்ட...௱௭௰௧.

செய்க்குவளைக்கண்மயிலேசெம்பொனுள்ளபேர்களைபுன்.....*
கைக்குள்வளையென்றுவளைகைக்கிட்டாள்-சிக்காப்புள்...௱௭௰௨.

பொட்டுக்குளாவதுபோலுள்ளபணக்காரர்களுன் ....*
பொட்டுக்குளாகவென்றுபொட்டிட்டாள் - பொட்டினவே.

வேந்தர்புதையல்வெளிபார்க்குமஞ்சனம்போல் ....*
வாய்ந்தவடிவேல்விழிக்குமையிட்டாள் - காந்திமுக....௱௭௰௪.

வன்னக்கமலமதில்வண்டிருந்தாற்போலமகள் ....*
கன்னத்தின்மீதோர்கறுப்பிட்டாள் - சொன்னதனம்...௱௭௰௫.

வீட்டேறப்பண்டைமுதன்மேலேறத்தன்குடும்பம் ....*
ஈடேறப்பொற்றொட்டிலேற்றினாள் - தேடியுன்பால்...௱௭௰௬.

வாராதவராரார்வந்துமடிச்சீலைகொட்டித் ....*
தாராதவராரார்தந்தணையிற் - சேராதார் ....௱௭௰௭.

ஆராரார்சேர்ந்துனக்குள்ளாசைகொண்டுசுற்றுதார் ....*
ஆராரொன்றுதாலாட்டினாள் - தாராட்டிச் ....௱௭௰௮.

சீராட்டிமுன்னிருத்திச்செங்கைகொட்டிக்காட்டிமஞ்ச ......*
ணீராட்டியந்திநிலாக்காட்டிப் - பாரிற் ....௱௭௰௯.

இளைப்பெரியநாகேந்திரன்கீர்த்தியைச்சொல்வாணர்..........*
வளர்ப்பதுபோற்பெண்ணைவளர்த்தாள் - மூளைக்குமகள்.௱௮௰

தள்ளிநடந்தாளதுகண்டுதாய்க்கிழவி ....*
துள்ளிநடந்தாள்துயர்தீர்ந்தாள் - பிள்ளையொரு........௱௮௰௧.

சிற்றுடைகட்டித்தெருவில்வரக்கண்டுதிட்டி.................*
சுற்றுமலேதிட்டிசுற்றினாள் - மற்றுமந்த ....௱௮௰௨.

வம்பிமகன்மழலைவார்த்தைக்கேட்டாடவரைத் ....*
தம்பியென்றுசொல்லத்தலைப்பட்டாள் - அம்புயச்செங். ॥௮௩.

கைக்குவளையிட்டுக்கடகம்பாளமிட்டுத் ....*
தக்கையிட்டகாதிற்றளப்பமிட்டுப் - பக்கத்திற் ....॥௮௪.

கொண்டையிட்டுக்குப்பியிட்டுக்கொப்பிட்டுக்காலில்வெள்ளித்
தண்டையிட்டுச்செம்பொற்சதங்கையிட்டு - வெண்டரள ॥௮௫.

மாலையிட்டிரட்டையரைஞாண்மருங்கிலிட்டு... ... .*
வேலையிட்டகட்டிநெற்றிமேலிட்டுக் - கோலச்சிந்......॥௮௬.

தாக்கிட்டுச்செம்பவளத்தாழ்வடங்களிட்டுவச்சிர ....*
மூக்குத்தலாக்கிட்டுமுத்தமிட்டு - நாக்குளிர ....॥௮௭.

வாரிட்டகொங்கைமதனைபிஷேகமெனப் ....*
பேரிட்[illegible]பேசிட்டாள் - ஆரியமும்.................॥௮௮.

கன்னடமுங்கட்டிக்கரும்புபோலேவடுகும் ....*
பன்னுதமிழும்படிப்பித்தாள் - மன்மதவேள் ....॥௮௯.

(பருவக்குறிதா[illegible]புணர்த்தல்.)

சிற்பரதவல்நூற்சிறியாள்வயதேழில் ....*
நற்பரதமெல்லாநடித்தறிந்தாள் - உற்பனமாம் ... ...॥௯௰.

மோனவித்தையுள்ளமுனிவோரையுமயக்குங் ....*
கானவித்தையெல்லாங்கரைகண்டாள் - மேனிக்குள்......॥௯௧.

வாடைமஞ்சள்பூசுவதுமல்லிகைப்பூச்சூடுவதும் ....*
ஆடவரைவிட்டுக்கழைப்பதுவும் - ஓடிப் ....॥௯௨.

பிலுக்குவதுங்கிட்டநின்றுபேசையிலேமுத்தாக் ....*
குலுக்குவதுங்கொஞ்சுவதுங்கொங்கைத் - தலைக்கறுப்பை......

முந்திகொண்டுவெட்கம்பொன்மூடுவதுங்காமுகரை ....*
அந்திட்டுமைத்துவிளையாடுவதும் - வந்தவரை ......॥௯௪.

வாள்வீச்சுப்போலவரிவிழியால்வெட்டுவதும் ....*
போள்வாய்ச்சிகண்டுடம்புபுரித்தாள் - வேளையார்...॥௯௫.

கைத்துர்வசமாகிவந்துகாலைப்பிடிக்குமந்தச் ....*
சொக்குப்பொடிமருந்துஞ்சொல்லிவிட்டாள் - சொக்கர்புது.

மண்டபத்தின்முன்னேவசந்தன்றிருநாளில் ....*
எண்டிசையோர்மெச்சவரங்கேற்றினாள் - ஒண்டொடிக்குச் .
சின்னச்சிமிழாகிச்செப்பாகித்தேங்காயாய் ....*
வன்னத்தனங்கள்வளர்ந்தேறத் - மின்னிடையாள் ....௱௯௮.
தன்னையறி[illegible]ள்தன்பழைய ....*
பொன்னையொருபக்கம்புதைத்துவைத்தாள் - மன்னவர்கள்.
சுற்றுவதுங்காமுகரைத்தேடாயமகட்குமனம் ....*
பற்றுவதுங்கண்டறிந்தாள்பப்பரத்தி - பெற்றெடுத்த ......௨௱.

(தாய்க்கிழவிபோதிப்புணர்த்தல்.)

மானேயென்கண்ணேமயிலேகுயிலேசெந் ....*
தேனேமதனபிஷேகமே - மீன்ற ....௨௱௧.
குஞ்சுக்குநீச்சுங்கொடும்பாம்பின்குட்டிக்கு ....*
நஞ்சுங்கொடுத்தவரார்நங்கையே - செஞ்சிலைக்குச் ......௨௱௨.
சீவகனுக்கன்றொருபெண்சிங்கமொருகன்றினும் ....*
பாவனைபோலேயெழுதிப்பக்கத்தில் - ஓவியமாக் ......௨௱௩.
காரானையொன்றெழுதிக்காட்டவரிக்கன்றுதுள்ளிப் ....*
போராடிப்பாய்ந்தகதைபொய்யலவே - யாருக்கும் ....௨௱௪.
சாதித்தொழில்தனக்குத்தானேவருமொருவர் ....*
போதிக்கவேண்டுமோபொற்கொடியே - மாதற்குள் ...௨௱௫.
உன்புத்தியென்புத்திக்கோவிரட்டியாகிலுமென் ....*
றன்புத்தியுட்களேசற்றேகேள் - ஒன்பதூர்க் ....௨௱௬.
கொஞ்சுபரிநகுலன்கூளேந்திரன்பன்றிமலை ....*
மஞ்சட்குளியைமறவாதே - மஞ்சண் ....௨௱௭.
மணங்காட்டியாட்பிடிக்கும்வாடைப்பொடியின் ....*
குணங்காட்டிக்கண்காட்டிக்கோலம் - இணங்கியபொன் ௨௱௮.
றுத்தரியஞ்சற்றேறப்பொருபாற்றெரியவிட்டுக் ....*
குத்துமுலைச்செம்பொற்குடங்காட்டி - முத்துநகை ...௨௱௯.
காட்டிவகைகாட்டிநடைகாட்டியிடைகாட்டிநயம் ....*
காட்டியிளையோர்க்காசைகாட்டுவாய்-கோட்டுமுலை ... ௨௱௰.

சாய்ந்தான்முகந்திரைந்தாற்சலிக்காசொன்றுமுனக் ... *
கீந்தாதரிப்பவராரோந்நிலைமயே - ஆய்ந்தபஞ்சுப் ௨௱௰௧

பெட்டிபோலேநனைத்தபெண்கள்கையிலென்னவருஞ் ....*
சட்டிசுறண்டவருந்தையலே - கட்டழகின் ௨௱௰௨

வாலிபத்தேதேட்டின்மனம்வைத்தாற்பொற்றகட்டால் ......*
வேலையிட்டுக்கட்டலாம்வீடெல்லாம் - காலைப் ௨௱௰௩

பிடிப்பார்முழுப்பிரட்டுப்பேசியிலைகீறி.................*
படிப்பார்தருவார்வருவார்-படிக்கைவிதங்..........௨௱௰௪

காட்டுவேனென்பாரகள்ளவண்டர்தங்களையுன்..............*
வீட்டிலழையாதேமெல்லியலே-வீட்டில்வந்து.......௨௱௰௫

பாயப்பகட்டுவிதம்பண்ணுவார்க்குப்புழுதி.................*
வாயிற்புகட்டுமயல்பூட்டு-நீயொருத்தர்க்...........௨௱௰௬

காசைவைத்தாற்பின்றொடர்ந்தாண்டாருடனொத்த............*
வேசையர்க்கெல்லாநகைப்பாமெல்லியலே-காசுபணம். ௨௱௰௭

குப்பல்குப்பலாகக்குவித்தாலும்வாலிபத்தில்............ *
வைப்பிருக்கச்சற்றுமனம்வையாதே-செப்பு.........௨௱௰௮

முலைப்பாக்கிலிட்டுமுட்டாள்சரசத்.....................*
தலையிலிடும்பேரையழையாதே-சிலைநுதலாய்......... ௨௱௰௯

முன்பின்னறியார்முடிப்பாகப்பொன்னெழுநூற்............*
றென்பதுதந்தாலுமனமொவ்வாதே-இன்பமுடன். ... ௨௨௰

கூடுவார்நித்திரைநீகொள்வதுபார்த்துப்பொடியைப்.........*
போடுவார்சேலைகர்க்கம்பொன்னுடைமை-சோடிணையாச்.

சேரச்சுருட்டியப்பாற்செல்வார்விடிந்ததற்பின் ... .*
யாரைப்போய்க்கேட்பதுநாமாரணங்கே - ஊரிலே...௨௨௨

தந்தைகீழ்ப்பிள்ளைபுண்டுதாய்கீழ்ச்சிறுவருண்டு ....*
வந்தால்மறையவரச்சொல்லித் - தந்தமதின் ௨௨௩

வாயில்வடுச்செய்யாமல்மார்பினகம்வையாமல் ....*
தோயுமிதங்காட்டிச்சுகங்காட்டு - சேயிழையே ௨௨௪

அந்திபட்டப்பணயமஸ்தரொக்கமாகவந்தால் ....*
சொந்தமுள்ளபேர்தமக்குச்சொல்லியே - முந்திவந்து..௨௨௫

சாரமுண்டாய்நீயவன்பிச்சைக்கையெத்திரட்டாளெனமுன் ... *
னேயடழைத்தனுப்புநேசமாய்த்-தூரத்தி ... ௨௨௬
திருந்துவந்துகூடிவிடிந்தேகுவார்தம்மேல் ... *
பரிந்தாசைபோற்பிறகேபற்றிப்-பிரிந்திருக்க ... ௨௨௭
மாட்டேனேயுன்றலைமாட்டிவிளைமாராசையெல்லாம் ... *
போட்டேனேயென்னைப்பொடிபோட்டாய்நீ-வீட்டில் ... ௨௨௮
தனித்திருக்கப்போமோடாசாமியுன்றம்பல் ... *
இனித்திருக்குந்தாடாவிருடா-சனிக்கிழமைக் ... ௨௨௯
கப்பாலோநீவரு[illegible]லும் ... *
தப்பாதேயென்றனுப்புதார்குழலே-மைப்பொருங்கண் ... ௨௩௰
மாதுநல்லாய்வேறுமருந்தேனவர்திரும்பும் ... *
போதுவருமேயுதையெல்லாம்-காதல்கொண்ட ... ௨௩௧
மன்னவனைத்தூங்குசப்ரமஞ்சத்திலேயிருத்தி ... *
பொன்னவளைக்கேளாமற்புல்விறலி-பின்னரசே ... ௨௩௨
உளர்க்குஞ்சலிகைநம்மோட்டாத்தவர்க்குமெண்ணனித்தை ... *
யார்க்குங்கனைத்தகுடியாகலாம்-பார்க்குள்ளே ... ௨௩௩
புல்லுப்பிரீங்கிவிற்றும்பொன்கொடுப்பார்காணமக்குக் ... *
கொல்லிமலைப்பாவாய்குலதெய்வம்-பல்விழுந்த ... ௨௩௪
கூனற்கிழவன்கொடுக்கும்பணயத்தில் ... *
நானக்குழலேநலாயுண்டோ-மானமின்றி ... ௨௩௫
அப்பன்வருவானதன்பின்மகன்வருவான் ... *
தப்புமுறையென்றுநீதள்ளாதே-இப்புவியில் ... ௨௩௬
மாலக்குளியர்வெகுமாமாயக்கள்ளர்தங்கள் ... *
சோலிக்குப்போகாதேதோகையே-வேலையின்றித் ... ௨௩௭
தந்தையனையாளைத்தழுவிப்பணம்பறிக்கும் ... *
எத்தனைநாமெத்துவதுமெத்துகாண்-சித்ர ... ௨௩௮
கதையைக்கேளென்பருவக்காலத்திலிந்தப் ... *
பதியிலோர்க்குச்சிலியப்பையல்-மதுரை ... ௨௩௯
மழுங்குணியென்னும்பேரான்மாதர்தனத்தைத் ... *
தழுவிப்பறிப்பான்தனத்தை-முழுதும் ... ௨௪௰

வாவென்றழைப்பார்மணியப்பிளுக்கர்சும்மா... ... ... *
பேயென்றுசொன்னாலும்பொல்லாப்பு-பாவையே ... ௨௭௧

சாதனையாச்சேலையிலேதப்பலத்தின்சாறுபிழிந்து... ... ... *
சூதகமானேனென்றுதூரவிரு-மாதவிடா... ... ... ௨௭௨

யானநாளிற்பணயமஸ்தரொக்கங்காணிலொரு... ... ... *
பானைவெந்நீர்க்காகவெண்ணிப்பாராதே-நானுன்மேல். ௨௭௩

மோகமுற்றேனீயென்மேல்மோகமில்லையென்றுரைச்... ... *
தோகைநல்லாயுன்கருத்தைச்சோதிப்பார்-யூகோநீர் ... ௨௭௪

என்னமாச்சொல்லவந்தீரொன்றுமையும்மேலென்... ... ... *
றன்னமேயென்றலைதொட்டாணையிடு-சொன்னவந்தப் ௨௭௫

பொய்யாணையாற்சீவன்போகுமேதாபரொனக்குத்... ... *
தையாலவ்வாணைதயிர்ச்சாதம்-கையிலே... ... ...௨௭௬

இருட்டினிற்செல்லாப்பணத்தையீந்துபடுத்துக் ... ... *
கருக்கலிலேபோவானைக்காட்டித்-தரச்சொல்லு... ... ௨௭௭

வாயடைட்டாப்பேசினைமானேமுசலின்மேல்... ... ... *
நாலைவிட்டாற்போலொப்பிநம்மைவிடு-கோயிலுக்குள்.

நம்பியாரையருடனுன்னைநம்பியார்... ... ... *
தம்பியாரைக்கூடிச்சஞ்சரிநீ-அம்பெனுங்கண்... ...௨௭௯

டைவிஸ்தாரக்குயிலேவாய்விஸ்தாரக்காரன்... ... ...*
கைவிஸ்தாரக்காரன்கையைவிடு-செப்புமறைக்... ...௨௮௰

கட்டளையார்வந்தாலுங்கைப்பட்டருந்தாலேயறிவைத்... ... *
தட்டழியப்பண்ணித்தனம்பறிநீ-அட்டிவிலே ௨௮௧

சோறுசமைக்குஞ்சுயம்பாகிவந்தக்கால்... ... ... *
வேறுமொருவேளாண்மைவேண்டுமோ-சாறும்... ... ௨௮௨

பருப்படியுஞ்சம்பாவும்பாற்குழம்புநெய்யும்... ... ... *
வருப்படிந்தகட்டளையாய்மானே-தரும்பொருளை.... ௨௮௩

வெம்பரிக்கைபண்ணுமேதவெஞ்சினப்பண்டாரிவந்தா... ... *
ஓம்பரிக்கையூர்வரத்தையொக்குமே-சம்பளத்தைத்... ௨௮௪

கூட்டிச்சுமத்திவைப்பான்கோபித்தாக்கட்டுரு... ... ... *
வெட்டுப்போட்டுப்போகவிட்டிலையே-ஆட்டுவிக்கத்... ௨௮௫

காலிபிடித்தநட்டுவனார்கையைப்பிடித்தழைத்தால் ...... *
வேல்பருத்தகண்மயிலேமேவிவிடு - சாலநெடு ...... உஅசு.
நேரந்தெரிசன[illegible]நெடுங்குடைசைக்காரனைமுன் ...... *
னேரமழைத்தனுப்புநேசமாய்ச் - சாருமுள்ள ...... உஅஎ.
நாடகத்துப்பாங்குநமக்குநடத்துவிக்கும் ...... *
பாடகனையுந்தனதுபண்ணிக்கொள் - கூடுதித்திக் ...... உஅஅ.
காரனையுங்கைத்தாளக்காரனையுமெக்காளக் ...... *
காரனையுங்கூடியிதங்காட்டாதே - தூறு ...... உஅகூ.
தலையாரிக்கைத்தாழைத்தம்பியராய்ப்பிறந் ...... *
கலைபராயுன்னழகைக்கண்டு - விலைகொடுத்தால் ...... உகூய.
வாங்குவாய்சற்றேமருவுவான்பேய்ப்பயலவான் ...... *
தூங்குவான்போவான்சுகமறியான் - பூங்குயிலே ...... உகூக.
மஞ்சத்தினீயுமொருமாப்பிளையுமாயிருந்தா ...... *
மிஞ்சுசரசத்திலொருவேற்றுள்வந் - தஞ்சாறு ...... உகூஉ.
தந்தாலவனைச்சமையல்வீட்டிற்பதுக்கிச் ...... *
செந்தேனைமெல்லச்செறுமுவேன் - வந்தணைந்து ...... உகூங.
தொல்லைக்குப்போனகுணம்போற்கைகாலலம்பி ...... *
மெல்லப்போநம்மைப்பெயர்வெல்லுவார் - நல்ல ...... உகூச.
உடந்தையாகத்திரிந்தவுத்தியோகஸ்தர்க் ...... *
கிடைஞ்சல்வந்தாலுன்னையும்வந்தேய்ப்பர் - மடந்தையே.
காணிக்கையானேனுன்கண்டிகையைத்தாதண்டையைத்தா ...... *
மாணிக்கமாலையைத்தாவைத்துநான் - காணிக்கை ...... உகூசு.
தீர்ந்தமறுமாதந்திருப்பித்தருவனென்பார் ...... *
ஏந்திழையேநீசற்றிணங்காதே - காந்தாரி ...... உகூஎ.
தாய்க்கிழவிசம்மதித்தாற்சம்மதமென்பாயெனது ...... *
வாய்க்குப்பதந்தவர்பின்வாய்ப்பேசார் - நோக்கமாய் .. உகூஅ.
என்னைக்கலந்தவர்களென்றாலுங்கைநிறையப் ...... *
பொன்னைக்கொடுத்தாற்புணர்ந்துவிடு - மின்னே ...... உகூகூ.
பறவைமிருகங்கண்முறைபார்க்குநோவேசி ...... *
முறைபார்க்க[illegible]ப்புமோசம் - சிறுபோதே ...... ௩௱.

தேடியல்லோவன்பிற்சிலம்பியென்றுமன்னவரைக்...............*
கூடுதிருவாரூர்க்கொண்டியென்றும் - ஆடவரைத் .... ௩௱௪.
தெட்டிம்பெருங்குண்டைத்திம்பியென்றுங்கொண்டையிற்பூ.*
மட்டுண்டவொற்றியூர்வல்லியென்றும் - சிட்டர்தொழும்.
பூவணமாம்பொன்னகரிப்பொன்னனையாளென்றுமுடற். [ம்
பூவணமாந்தென்னுறையூர்ப்பொன்னியென்றும்-தேவர்தொழு
சொக்கேசர்கோயிற்றுணைக்கொடியென்றும்புவிக்குள்......*
மிக்கானபேர்படைத்தாய்மெல்லியலே - அக்காலம் ......௩௱௫.
வண்ணமாற்றுப்பசும்பொன்வாங்கவொருத்திசெய்த..........*
கின்னமாற்றுத்[illegible]கேட்டிலையோ - பெண்ணணங்கே ...
என்றிப்படித்தாயியம்பினள்புத்தியதை......................*
யன்றிப்படித்தாளனேகபுத்தி - அன்றுமுதல் ....௩௱௬.

(மதனபிஷேகத்தின்செய்திகூறல்.)

காதன்மதமீறிவருங்காமுகராம்யானைகளைக் ....*
கோதுமுகிரங்குசத்தாற்[illegible] - ஓதியந்த ....௩௱௭.
மாரனரமனைக்குள்வைத்தணைத்துச்சேர்ந்துரச................*
சாரக்கரும்புதனையூட்டி - மூரல்வாய்த்.....................௩௱௮.
தம்பற்கவளந்தனைக்கொடுத்துக்கும்பமுலைக் ....*
கம்பத்[illegible]த்துக்கட்டினாள் - அம்பரத்தி ....௩௱௯.
மூட்டுவிக்கும்யோகமுனிவோரையும்பொம்மல் ... ...*
ஆட்டுவிக்குந்தோலுருப்போலாக்கினாள்தீட்டியவேல்....௩௱௰.
வண்ணக்குடையரசர்மாநிதியர்முந்நீரை......................*
உண்ணக்குறுமுனியையொப்பாள் - பெண்ணுக்குத் . ௩௱௰௧.

(அவளதுதோழிகளைக்கூறல்.)

தோழிமார்கைமருந்துச்சொக்கியென்றுஞ்சாராயத்.........*
தாழியென்றுந்தாதுசவுந்தியென்றும் - ஏழுமதி ......௩௱௰௨.
லேறியென்றுந்தஞ்சாவூரொத்தியென்றுமாமாயக்....... ......*
காறியென்றுங்குண்டுணிவாய்க்கள்ளியென்றும் - மாறுபட்டக்.
குள்ளியென்றுமாயக்குருவியென்றுமாரீசக் ....*
கள்ளியென்றும்பத்துப்பேர்காமுகரை - மெள்ளப் .... ௩௱௰௩.

பொருத்துவர்நடலாய்ப்பேரவரைமோடி ....※
திருத்துவார்தாராளைச்சிம்பித் - தரத்துவார் ....௩௱௰௫.
கல்லிலேநாருரித்துக்காண்பார்நனைந்தவிடங் ....※
கல்லுவார்தாமுமொருகைபார்ப்பார் - மெல்விறலார். ௩௱௰௬.

[அவளைவிரும்பியஆடவர்செய்திகூறல்.]

இவ்வாறுசெய்யவிருந்தியந்தேடமந்த ....※
மைவார்விழிப[illegible]நற்கும் - செவ்விக் ....௩௱௰௭.
நொடியிடைக்குநிலவெறித்தகுறுநகைக்குமொயில்விளைத்த. ※
பிடிநடைக்கும்வயிரமிட்டப்ரபைமிகுத்த - தொடிகளுக்கும்
அலையுதித்தவமுதெனச்சொலருமொழிக்குமிருவிழிக்கும். ....※
மலைகளொக்குமுலைகளுக்குமனதுவைத்து - வலையினுக்குள்.
மான்சிக்கினாற்போல்மருள்வாருந்தூண்டிலிலே................※
மீன்சிக்கினாற்போல்மெலிவாரும் - என்சிக்கிக். ....௩௱௨௰.
கொண்டோமென்றுள்ளங்கொதிப்பாருங்கூடியின்பம். ....※
கண்டோமென்[illegible]ருங் - கண்டனைய ......௩௱௨௰௧.
பேச்ச[illegible]டனதாசையென்று ....※
பூச்ச[illegible]போவாரும் - வாய்ச்சதென்றே .௩௱௨௰௨.
யார்க்கும்பொடிபோட்[illegible]முன்வாடைமணம் ....※
சேர்க்கும்பொடிபூசிச்செல்வாரும் - உணர்க்கிணங்கத். . . .௩௱௨௰௩.
தந்தனத்தைமீந்துசரிந்ததனக்காரிபண்ணுந் ....※
தந்தனத்துக்குள்ளாய்த்தளர்வாரும் - தந்திரமாய். ......௩௱௨௰௪.
மாதைப்பசப்பவென்றுவாசல்பட்டுவந்துநரைப் ....※
பூதத்தைக்கண்டகலப்போவாரும் - கோதாயுன் ....௩௱௨௰௫.
கால்பிடிக்கவோவடைப்பைநட்டவோசண்பகப்பூ ....※
மேல்பிடிக்கவோவிசிறிவீசவோ - கோலமலர் ....௩௱௨௰௬.
கட்டவோகட்டழகிகண்ணுறங்கப்பொற்குறங்கு..................※
தட்டவோவென்றருகிற்சார்வாரும் - மெட்டிவேர் ....௩௱௨௰௭.
மண்டுகுழலாள்குளித்தவாடைமஞ்சணீராயள்ளிக் ....※
கொண்டுதலைமேற்றெளித்துக்கொள்வாரும் - அண்டர்பிரான்.

சன்னிதியிற்சந்நடிப்பிற்றூன்றுவீழ்வார்போற் ....❊
பின்றொருந்துழலாளைப்பிடிப்பாரும்-பின்னொருத்தன் ......௩௨௯.

வீட்டிலிருக்கவெளியிலேநின்றாசன்னை ....❊
காட்டித்திரிந்துகளைவாரும்-வீட்டிறப்பை ....௩௩௰.

அண்டிக்கலவிசெப்புமாரம்பங்கேட்டுவெட்டித் ....❊
துண்டித்தாற்போலத்துடிப்பாரும்-கண்டனையாள் ... ...௩௩௧.

சோதிமுகமஞ்சள்றுவண்டாகிற்போர்வையுடன் ....❊
வீதிதொறும்போய்ப்பிலுக்கிமீள்வாரும்-காதளவு ... ... ௩௩௨.

பைப்பட்டகண்ணிசப்பிரமஞ்சத்தின்மேற்காலத் ....❊
துப்பட்டிகொண்டுதுடைப்பாரும்-செப்பமுள்ள ... ... ௩௩௩.

தெப்பத்திருநாளிற்றெப்பக்குளத்துமங்கை ....❊
தெப்பத்தேயேறிவருஞ்சிராட்டில்-அப்பம் ....௩௩௪.

வடைசுகியன்றோசைவகைகள்பணியாரம் ....❊
கடையிலேகொண்டுமடிகட்டிச்-சடுதியிற்போய் ... ... ௩௩௫.

நாரிகையிலேகொடுக்கநாடிவட்டோடுமாழ் ....❊
வாரியிலேயோடிவருவாரும்-பேராம் ....௩௩௬.

வசந்தன்றிருநாளின்மண்டபத்தில்மங்கை ....❊
இசைந்துநடம்புரியுமெல்லை-கசங்காமல் ....௩௩௭.

மல்லிகைப்பூச்செண்டுமெருக்கொண்டுசந்தடியை ....❊
மெல்லவிலக்கிவரும்வேளையிலே-நல்லபடைக் .... ௩௩௮.

கம்பாலடிப்பட்டகஸ்திரிறுன்றொருந்துடம்பு ....❊
செம்பாலொழுகத்திரிவாரும்-தம்பிரான் ....௩௩௯.

பல்லக்குக்கூடிபதினாறுநாழிகைமேல் ....❊
வல்லொக்குங்கொங்கைவளவுக்குச்-செல்லுகையிற் ......௩௪௰.

குத்தல்வாய்காட்டிக்கொடுக்கத்தலையாரி ....❊
கைக்குளகப்பட்டுக்கட்டுண்டு-கக்குராத்தம் ௩௪௧

மூக்கிற்பொழுகமுழங்கையிடிபட்டுநெஞ்சிற் ....❊
சீக்கட்டிக்கொண்டுதிரிவாரும் - தூக்குமஞ்சத் ....௩௪௨.

தேவொருவன்வீட்டிலிருக்கவதுகாணமற் ....❊
போவொருவன்வீட்டிற்புகுதவே - நியாயமற்ற ....௩௪௩.

பூசல்விளைத்துப்பொருண்மையிலேவர்து ....*
பேசிவெளியிற்பிறப்பட்டு-ரோகமுடன் ....௱௪௪.
மாதொருத்திக்காப்பொருதவாவிபுஞ்சக்கிரேவனும்போல் ... *
வீழ்மேடைறட்டிவீழ்வாரும்-சாதிராத்தி .... ௱௪௫.
வட்டிவெளிச்சமினுமினெனவந்தியர்முன் ....*
கட்டியங்கள்கூறக்கடுநடையாய்த்-தொட்டுவரும் ... .௱௪௬.
பர்தக்குறட்டிற்பவளக்குமிழிலங்க ....*
மாதுடனவறைக்குள்மன்னர்வரும்-போதிலந்த ....௱௪௭.
வீட்டிற்பரணேறிப்பேழைநெற்குதிலமளி ....*
கேட்டுப்பதுங்கிக்கிடப்பாரும்-பாட்டின்ஞ்சொரன் ... ...௱௪௮.
மாக்குயிலை ... பாலமருவக்கனவுகண்டு ....*
தூங்கையிலேயிந்திரியஞ்சோர்வாரும்-ஈங்கிவளுக் ..... ௱௪௯.
கேயகைகானேசிரதம்பொன்றுக்குவது ....*
பாயமென்றுமித்திரம்பலகூட்டித்-தீயிற் ....௱௫௰.
குகையிலேவைத்துக்குனிந்தூதிவர்தப் ....*
புகையிலடிபட்டுப்புகைந்து-நகைதெரியா ....௱௫௧.
டாலைக்கண்ணுகிமதிமயங்கித்தங்கள்தங்கள் ....*
காலைக்கண்ணுக்கிவழிகாண்பாரும்-வாலிபத்தில் ....௱௫௨.
பூணேர்முலையாட்காப்பொன்திருடிக்கையிரண்டும் ....*
சாணகக்கண்டுதளர்வாரும்-வாணுதற்காத் ....௱௫௩.
தாங்கன்னமிட்டுத்தலை ... காக ....*
வாங்கென்னவிட்டுடலைமாய்ப்பாரும்-தூங்கிவிழும் .....௱௫௪.
வ ... மயிரும்மாதவிடாய்த்தம்பலமும் ....*
பெண்ணைத்தலையோடுபின்னைபொன்றும்-சண்ணைப்புப்.
பானைபோலேநரைத்தபாவிபடுக்கைத்தலத்திற் ....*
பூனைபோற்சுருண்டிப்புதைப்பாரும்-மானனையாள் ... ௱௫௫.
இட்டமருந்தாலிருமல்பிடித்தேதாயாமற் ....*
குட்டியிட்டநாய்போற்குரைப்பாரும்-ஒட்டியபின் ... ௱௫௬.
என்பவர்க்குநாணியிரசந்தின்றின்கருப்பு ....*
தின்பவர்க்குநாணித்திரிவாரும்-பொன்சரிகைச் ....௱௫௭.

சேலைகொடுத்ததற்குச்சீமாட்டியென்கொடுத்தாள் .... *
ஞாலைகொடுத்தாளென்றுசொல்வாரும்-மூலவரை ௩௫௯
யாட்புக்குச்சத்திரமிட்டாவிக்காக்கக்காக்காய்த் .... *
தோப்பிற்கிடந்துதுடிப்பாரும்-மாப்பிள்ளைமார் ௩௬௰
வைத்தநாட்கு[illegible]றுகொங்கையிற்கண் .... *
டெய்த்து[illegible]ரும்-முத்துமுத்தாய்ப் ௩௬௧
பேசினறும்போதும்பேதைநடைத்தாதினமா .... *
ஏசினறும்போதுமென்பாரும்-பாசிழையாள் ௩௬௨
கொந்தலரும்பூவணைமேற்கும்பர்ணலீலைசெய .... *
இந்திரன்போற்பக்கத்திருப்பாரும்-ஐந்துபத்து ௩௬௩
மாடுவிற்றோநாறுமறிவிற்றோமேடூடந்தை .... *
ஆடுவிற்றோம்விட்டிலடிமைவிற்றோம்-தேடரிய ௩௬௪
வெண்கலத்தாற்கூத்துவிளக்குவிற்றோங்காணிவிற்றோம் ...... *
உண்கலத்தைவிற்றோமுடைமைவிற்றோம்-பெண்செலவுக் ௩௬௫
கென்னத்தைக்கேட்கவந்தாலென்னத்தைநாங்கொடுப்போம் *
என்னத்தைச்சொல்லுவோமென்பாரும்-முன்னமிந்த ௩௬௬
மின்றனைசொள்ளாமல்வீணுக்குக்கொண்டோமிச் .... *
சன்றனைசென்றுதளர்வாரும்-என்னசெய்வோம் ௩௬௭
பங்கைவிற்றுமீற்தோம்பணம்பினுந்தாவோவென்றாள் .... *
எங்கேசுமைமெயடுப்போமென்பாரும்-ரங்குலுக்கு ௩௬௮
தித்திலோணுகாசுசெவ்லோணுபோங்குவுநாம் .... *
இத்தனைபட்டுத்தோற்றிழந்தோமென்பாரும்-அத்தையார் ௩௬௯
குளைமானைநன்னுசொர்ணவெல்லாந்தக்கொண்டு .... *
நாளையென்றுசொன்றுமனைநவாரும்-நாளிலே ௩௭௰
பாண்டிநாட்டிச்சிபணமுழுஞ்சினன்நாங்கள் .... *
ஆண்டியானோமென்றலைவாரும்-ஆண்டியர்தம் ௩௭௧
தொண்டுபோய்வேடம்போய்த்தொகைக்குடையவரைக் ... *
கொண்டுபோய்க்கையிற்கொடுப்பாரும்-கண்டசெட்டு ... ௩௭௨
மோசமாச்சுக்காண்முதலுக்குப்புல்வாண்டைக் .... *
காசமில்லையென்றுகலாவாரும்-வேசிப்பிலட் ௩௭௩

ஈந்தபொருளைவட்டிக்கீந்தோமோ நாமிருக்க ... ... ✻
வாய்ந்தமச்சுவீடுகட்டிவைத்தோமோ - கூந்தலினாய் ..... ௫௭௪.

பேடைமயில்போல்வீட்டுப்பெண்டாட்டிக்கேயுடைமை ... ✻
சோடிணையாப்பூட்டிச்சுகித்தோமோ - ஆடுகொண்டு ... ௫௭௫.

விட்டோமோமாடுகொண்டுவிட்டோமோதெய்வத்துக் ...... ✻
கிட்டோமோதேகியென்பார்க்கீந்தோமோ - அஷ்டதிக்கும்.

நாடிப்புகழ்பெரியநாகமன்போற்பாமாலை .... ✻
சூடித்தியாகஞ்சொரிந்தோமோ - தேடுநிதி .... ௫௭௭.

தன்னைக்கொடுத்துத்தரித்திரத்தைவாங்கினோ ... ... ✻
மென்னவியாபாரமென்பாரும் - இன்னவகை .... ௫௭௮.

காமுகரெல்லாமயங்கக்காளத்தியையன்மகன் ... ... ✻
ஆமொருவனிவ்வூரானாதியையன் - சேம ... ... ௫௭௯.

மதுரைக்கொருநாள்போய்மாசித்தெருவில் ... ... ✻
விதிவசத்தாற்கண்டாநம்பின்னை - மதிநுதலாள் .... ௫௮௰.

மையலுக்குள்வீழ்ந்தான்வடுச்செய்தமாமரத்தில் ... ... ✻
மெய்புரிஞ்சப்போய்க்கவரிவீழ்ந்தாற்போற் - கையில் ... ௫௮௧.

இருந்ததெல்லாம்வீட்டிலிருந்ததெல்லாமாஸ்தி ... ... ✻
இருந்ததெல்லாந்தோற்றானிரந்தான் - மருந்திறைத் ... ... ௫௮௨.

கள்ளுண்டார்போலக்கலங்கினான்வாசலிலே ... ... ✻
தள்ளுண்டான்றன்னொழுக்கந்தப்பினான் - விள்ளுவதென்.

ஆதியையனென்னும்பேரன்றேபோயிப்பால்வி ... ... ✻
யாதியையனென்னும்பேராயினான் - பாதி ... ... ௫௮௪.

யுடலாகியொட்டியபுண்ணுள்ளருக்கயார்க்கும் ... ... ✻
தொடலாகாச்சீச்சிரங்குஞ்ல - கொடிய ... ... ௫௮௫.

அரையாப்புமேகவெட்டையண்டத்துவாதம் ... ... ✻
புரைவாய்ப்பவுத்திரம்புகைச்சல் - இருமல் .... ௫௮௬.

இளைப்புப்பொடுகுமருந்திட்டநோய்ப்பித்தம் .... ✻
களைப்புமாய்ப்பூனைபோற்கத்திக் - கிழக்கே .... ௫௮௭.

அடுத்தமனையிலருகுதிண்ணைதன்னிற் .... ✻
படுத்துக்கிடக்குமென்பாரும் - படித்தவரே ... ... ௫௮௮.

இப்படியாத்தேடியுண்ணுமேந்திழையாள்வாழ்ந்தூரைக் ... *
கெப்படிபோயீர்வருவதெப்படிகாண்-செப்புமவ......௱௮௯.

தானிவையேயென்றுதக்கபுத்திபோதிக்க... ... ... *
ஞானியையைப்பார்த்துநான்விரத்தி-யானேன்...... ௱௯௰.

[அவதானிமதுரைக்கேகினமைகூறல்.)

இருப்புத்தூணிற்கறையானேறுமோபோம்போம்...... ... *
நெருப்பிற்புழுவிழுமோநீபொன்-கருத்தை... ... ...௱௯௧.

அறிவீரொன்றேனல்லதையோவென்று... ... .*
பிறியாமல்வந்தாளொன்பின்னே-நெறியினிற்போய்.....௱௯௨.

வையகமேமெய்த்தியசீர்வைதிகநூன்மெய்பொலிசேர்.........*
மொய்த்திரைநீர்வையையில்யான்மூழ்கியே-உய்யப் .....௱௯௩.

படிபுகழடியவர்கொடியபடிறுசெயுமிடர்முழுதும்............*
அடருமெழுகடலினிடையாடிக்-கிடையாப் ....௱௯௪.

பாத்துக்கேவிருப்புற்றோர்பவத்துக்கோர்நெருப்பொப்பாம் *
அருட்பொற்றாமரைக்குட்போயாடி-உருச்செபிக்கும். ௱௯௫.

ஐந்தெழுத்தைச்சிந்தைவைத்ததிட்டன்பருக்குச் சஞ்சலத்தைச்.
சிந்துசித்திக்குஞ்சரத்தைத்தெண்டனிட்டுக்-கந்தபுஷ்பக் ௱௯௬.

கற்பகமெனப்பொலிகடப்பநிழலிற்றுலவும்... ... ...*
அற்புதகயற்கணுமையைத்தொழுது-சிற்பரத்தில் ... ...௱௯௭.

நேசர்மனவாசர்பவநாசர்கயிலாசர்சக...........*
தீசர்மதுரேசரடியான்போற்றி-நேசமுடன்..........௱௯௮.

துங்கப்ராகாரத்தைச்சுற்றிவடகுடபாற்.......... ... ...*
சங்கப்புலவர்தமையேத்தி-எங்குமுள்ள... ... ...௱௯௯.

தீயமாபாதகமுந்தீரத்தீர்த்தப்பருகி... ... ... *
நாயகர்பொற்கோபுரத்தைநானீங்கி-ஆயிரக்கால்....... ... ௨௱.

(மதனபிஷேகத்தைக்கண்டுமருண்டமைகூறல்.)

மண்டபத்திற்கண்டேன்மதனபிஷேகத்தை... ... ...*
விண்டலத்தைவிட்டுவந்தமேனகையைக்-கொண்டைச்... ௨௱௧.

சொருக்கழகுமுத்துத்தூராயழகுஞ்செவ்வாய்.............*
முருக்கழகுஞ்சேலுமப்பிற்-கருக்கழகும்.......... ...௨௱௨.

